CA

04 ஆக. 2023 03:54 பிற்...

வணக்கம். கடந்த 08/02/2023 அன்று காலையில் நடைபெற்ற TET தேர்வு எழுதியிருந்தேன்.
எனது பெயர் [redacted]
எனது பதிவு/ [redacted]
22TET210469 [redacted]
பெற்ற மதிப் [redacted]

அந்த நாளில் நடைபெற்ற
TRB TET PAPER 2 ல் பல்வேறு தவறுகள் வினாக்களிலும் , விடைகளிலும் இருந்தன. இது குறித்து பல்வேறு விதங்களில் TRB கவனத்திற்கு கொண்டு சென்றும், எந்த பலனும் இல்லை. மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அரசு வேலைக்காக படிக்கும் ஏழை பணி நாடுநரான எனக்கு நீதிமன்றம் நாடி செலவு செய்து மதிப்பெண்கள் பெற முடியாது.

தயவுகூர்ந்து 08/02/2023 FN வினாவிடைகளில் உள்ள பிழைகளை மீண்டும் மீளாய்வு செய்து, எனக்கு நியாயப்படி கிடைக்கவேண்டிய 82+ மதிப்பெண்களைத் தர வேண்டுகிறேன்.
மீளாய்வு செய்யப்பட வேண்டிய வினாக்கள்: Master question paper அடிப்படையில்
82, 14, 12, 64, 18, 90, 23, 108.

When kousik was a small boy, he ____ play cricket in streets

Final key ல் இவ்வினாவிற்கு நான் எழுதிய used to என்ற பதில் தவறு என்று கூறுவது எப்படி ஏற்க இயலும்?
மேலும் spelling mistake களுக்கு தயவுசெய்து மதிப்பெண்கள் தாருங்கள்.
TRB செய்த வினா விடை பிழைகளுக்கு தேர்வர்களை பலிகடா ஆக்குவது நியாயமாகாது. ( தயவு செய்து வல்லுநர் குழு முடிவே இறுதி என மட்டும் பதில்தர வேண்டாம் )

நன்றி

இணைப்புகள்

ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-06

அனுப்புநர்
துணை இயக்குநர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்
சென்னை-06

பெறுநர்
தனி அலுவலர்
முதலமைச்சரின் தனிப்பிரிவு
தலைமைச் செயலகம்,
சென்னை-09

ந.க.எண்.office.No/ 5360420 /E/2023, நாள். 05/10/2023

அய்யா,

| | | |
|---|---|---|
| 01 | முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண் | கடித எண். 5952508<br>நாள். 04.08.2023 |
| 02 | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி | |
| 03 | கோரிக்கை விவரம் | ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-II ஆட்சேபனை கேள்விகளுக்கு கூடுதல் மதிப்பெண்கள் வழங்க கோருதல் சார்ந்து |
| 04 | மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விவரம் | தேர்வு முடிவுகள் முற்றிலும் கணினி வழியில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், வல்லுநர்குழுவால் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகிறது. தனிநபர் தலையீடு ஏதும் இல்லை. எனவே, இறுதி விடைக்குறிப்புடன் வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகள் சரியானதாகும் இதில் மாற்றம் இல்லை. |
| 05 | மனுதாரருக்கு அனுப்பப்பட்ட பதிலின் சுருக்கம் | வரிசை எண்.04-ல் உள்ளவாறு |
| 06 | கோரிக்கை ஏற்கப்பட்டதா, நிராகரிக்கப்பட்டதா? | நிராகரிக்கப்பட்டது |
| 07 | கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இருப்பின் அதற்கான காரணங்கள் | மேலே கூறப்பட்ட காரணங்கள் |

/ஓம்/
துணை இயக்குநர்

கண்காணிப்பாளர் .../10/2023